பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

08 03 2025 7 15

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பெண்களுக்கான வாய்ப்புகளை வழங்குவதோடு அவர்களின் முழு ஆற்றலையும் ஆக்கப்பூர்வமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

2. அடுத்த 5 ஆண்டுகளில் 75 ஆயிரம் மருத்துவப் படிப்புகான இடங்கள் உருவாக்கப்படும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

3. சுயசார்பு இந்தியா இலக்கை அடைவதில் லித்தியம் பேட்டரி உற்பத்தி முக்கிய பங்காற்றுவதாக மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

4. மகளிருக்கு மாதம் தோறும் 2 ஆயிரத்து 500 ரூபாய் வழங்கும் திட்டத்திற்கு தில்லி அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

5. மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் பெங்களூரு அணி – உத்தரப்பிரதேச அணியை எதிர்கொள்கிறது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

பெண்களுக்கான வாய்ப்புகளை வழங்குவதோடு அவர்களின் முழு ஆற்றலையும் ஆக்கப்பூர்வமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் வளர்ச்சியடைந்த பாரதத்தை எட்டுவதற்கு ‘மகளிர் சக்தியின் பங்கு’ என்ற தலைப்பில் நடைபெற்ற ஒருநாள் கருத்தரங்கில் உரையாற்றிய குடியரசுத்தலைவர், நாட்டின் வளர்ச்சிக்காக அனைத்துத் துறைகளிலும் பெண்கள் தங்களின் முழு பங்களிப்பையும் செலுத்தி வருவதாக குறிப்பிட்டார்.

உலகின் 3வது பெரிய பொருளாதாரமாக இந்தியா உருவாகி வரும் நிலையில், மகளிருக்கான வேலைவாய்ப்புகள் அதிகரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

மகளிரின் வாழ்வாதாரத்தை உயர்த்தி அவர்களை அதிகாரம் மிக்கவர்களாக உருவாக்குவதற்கான முயற்சியில் மத்திய அரசு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் நவ்சாரியில் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி நடைபெற்ற மகளிரை லட்சாதிபதியாக்கும் சம்மேளன நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், பெண்கள் தலைமையிலான வளர்ச்சியை நோக்கி இந்தியா முன்னேறி வருவதாக கூறினார்.

மகளிரின் நலனுக்காக மட்டுமல்லாமல் அவர்களின் கண்ணியத்தையும், அதிகாரத்தையும் உறுதி செய்ய வேண்டும் என்பதில் தமது அரசு முனைப்போடு செயல்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

மகளிருக்கு அடிப்படை சுகாதார வசதிகள் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதற்காக நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான பாதுகாக்கப்பட்ட கழிப்பறைகளை அரசு அமைத்து தந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் அனைத்து துறைகளிலும் பெண்களின் பங்கு அதிகரித்து வருவதாக கூறிய அவர், இந்திய மகளிரின் வலிமையை ஒட்டுமொத்த உலகமுமே தற்போது உணர்ந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மகளிர் சுயஉதவிக் குழுக்கள் நாட்டின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றி வருவதாகத் தெரிவித்த பிரதமர், அடுத்த 5 ஆண்டுகளில் 3 கோடி லட்சாதிபதி பெண்களை உருவாக்க வேண்டும் என்ற இலக்குடன் தமது அரசு செயல்பட்டு வருவதாகக் கூறினார்.

நவ்சாரியில் நடைபெற்ற லட்சாதிபதி பெண்கள் சம்மேளன நிகழ்ச்சியை ஒட்டி பயனாளிகளிடம் பிரதமர் கலந்துரையாடினார்.

வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, சிறுதொழில்கள் போன்றவற்றில் பெண் உறுப்பினர்கள் வருவாய் ஈட்டும் நோக்கில் அவர்களுக்கான நிதியுதவியுடன் பயிற்சியும் அளிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் கூறினார்.

குஜராத் மாநிலத்தில் மட்டும் ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்களின் ஆண்டு வருமானம் ஒரு லட்சம் ரூபாயைக் கடந்து லட்சாதிபதி பெண்கள் என்ற பட்டத்தை அவர்கள் பெற்றிருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்களுக்கு 450 கோடி ரூபாய் கடனுதவியையும் அவர் வழங்கினார்.

<<<<>>>>

நாட்டில் அடுத்த 5 ஆண்டுகளில் 75 ஆயிரம் மருத்துவப் படிப்புகான இடங்கள் உருவாக்கப்படும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று சர்வதேச சுகாதார கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய அவர், கடந்த 2014ஆம் ஆண்டு முதல் 101 சதவீதம் மருத்துவக் கல்லூரிகள் அதிகரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்ட மருத்துவ சேவையை உறுதி செய்யும் வகையில் 22 எய்ம்ஸ் மருத்துவமனைகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மருத்துவக் கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கில் செவிலியர்கள், துணை மருத்துவப் பணியாளர்கள் மற்றும் முன்னிலைப் பணியாளர்களுக்கு பயிற்சியும் அளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

பிரதமரின் ஆயுஷ்மான் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் உயர் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு ஆண்டுக்கு 5 லட்சம் ரூபாய் வரை ஒவ்வொரு குடும்பத்திற்கும் மருத்துவக் காப்பீடு வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நடப்பாண்டு பட்ஜெட்டில் மருத்துவத்துறைக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு மருத்துவத்துறைக்கு முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்து திட்டங்களை நிறைவேற்றி வருவதாகவும் அவர் கூறினார்.

அனைவருக்கும் ஒட்டுமொத்த மருத்துவ சேவை கிடைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தேசிய சுகாதார இயக்கத்தின்கீழ் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ஆரோக்கிய ஆயுஷ் மையங்கள் அமைக்கப்பட்டு ஆரம்பகட்ட சுகாதார சேவை அளிக்கப்பட்டு வருவதாகவும் திரு. ஜெபி. நட்டா கூறினார்.

<<<<>>>>

சுயசார்பு இந்தியா இலக்கை அடைவதில் லித்தியம் பேட்டரி உற்பத்தி தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

தெலங்கானாவில் **Mahabububnagar** மாவட்டத்தில் தனியார் தொழிற்சாலை ஒன்றில் லித்தியம் பேட்டரி உற்பத்தி மையத்திற்கு அடிக்கல் நாட்டி அவர் பேசினார்.

எஃகு உற்பத்தியைப் போலவே பேட்டரி உற்பத்தியும் நாட்டின் வளர்ச்சிக்கு அவசியமானது என்று அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற பெண்களுக்கு மகளிர் தின வாழ்த்துகளையும் அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<>>>>

தில்லியில் மகளிருக்கு மாதம் தோறும் 2 ஆயிரத்து 500 ரூபாய் வழங்கும் திட்டத்திற்கு அமைச்சரவையின் ஒப்புதல் கிடைத்திருப்பதாக முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின் இன்று செய்தியாளர்களிடம் பேசிய திருமதி ரேகா குப்தா, வரும் நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் 5 ஆயிரத்து 100 கோடி ரூபாய் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் வகையில் தமது தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக கூறிய முதலமைச்சர், தகுதிவாய்ந்த மகளிர் இத்திட்டத்தில் தங்களது பெயர்களை பதிவு செய்துகொள்வதற்கான இணையதளம் விரைவில் உருவாக்கித் தரப்படும் என்றும் கூறினார்.

<<<<>>>>

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி மத்திய ரயில்வே, மும்பையில் இருந்து ஷீரடி செல்லும் வந்தே பாரத் ரயிலை அனைத்து மகளிர் பணியாளர்களுடன் இயக்கியது.

இந்த ரயிலில் எஞ்சின் பைலட், உதவி பைலட், ரயில் நிர்வாகி, டிக்கெட் பரிசோதகர்கள், உணவு வழங்கும் பணியாளர்கள் ஆகிய அனைத்துப் பணிகளுக்கும் பெண்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

குறித்த நேரத்தில் இந்த ரயில் ஷீரடி அடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மகளிரின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் நலனுக்கான திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற உலக மகளிர் தின விழாவை ஒட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் 100 பெண்களுக்கு பிங்க் ஆட்டோ வழங்கப்பட்டு அவர்கள் வருவாய் ஈட்டுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தி தரப்பட்டுள்ளதாக கூறினார்.

சுய உதவிக் குழுவினர் தங்கள் பொருட்களை கிராம மற்றும் நகரப் பேருந்துகளில் 25 கிலோ வரை கட்டணமின்றி எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

கூட்டுறவு வங்கிகளில் மகளிருக்கு முன்னுரிமை அடிப்படையில் கடனுதவி வழங்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

<<<<>>>>

யுக்ரைனில் ரஷ்யா நடத்திய தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டதாக யுக்ரைன் தெரிவித்துள்ளது.

யுக்ரைனின் **Donetsk, Kharkiv** நகரங்களின் பல்வேறு பகுதிகளில் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள், ட்ரோன்கள் ஆகியவற்றின் மூலம் ரஷ்யப் படைகள் நடத்திய தாக்குதலில் 8 அடுக்குமாடிக் கட்டிடங்கள் மற்றும் 30க்கும் மேற்பட்ட வாகனங்கள் சேதமடைந்துள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இத்தாக்குதலில் யுக்ரைனின் மின் உற்பத்திக் கட்டமைப்பும் சேதமடைந்துள்ளதாக அவர்கள் மேலும் கூறினர்.

இதற்கிடையே அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப்பின் அறிவுறுத்தலின்பேரில் யுக்ரைன் தொடர்பான செயற்கைக்கோள் புகைப்படங்களை அந்நாட்டுடன் பரிமாறிக்கொள்வதை நிறுத்தியுள்ளதாக அமெரிக்க தனியார் விண்வெளி நிறுவனம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் பெங்களூரு அணி – உத்தரப்பிரதேச அணியை எதிர்கொள்கிறது.

லக்னோவில் நடைபெறும் இப்போட்டியில் டாஸ் வென்ற பெங்களூரு முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

--------------

ஆசிய மகளிர் கபடி சாம்பியன் போட்டியில் இந்தியா பட்டம் வென்றது.

ஈரானின் டெஹ்ரானில் இன்று நடைபெற்ற இப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா 32-25 என்ற புள்ளிக் கணக்கில் ஈரானை வென்றது.

இதுவரை நடைபெற்ற 6 சாம்பியன் போட்டிகளில் இந்தியா 5 முறை பட்டம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

**<<<<The End>>>>**